புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தொல்காப்பியம் – வெட்சித் திணை

சூ.நளினி
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)
தமிழ்த்துறை, மொழிகள் புலம்
வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம் பல்லாவரம், சென்னை – 117

முனைவர்.செ.மார்கண்டன்
நெறியாளர், இணைப் பேராசிரியர் வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம் பல்லாவரம், சென்னை - 117

## முன்னுரை

தமிழின் பெருமையை உலகறியச் செய்யும் இலக்கியங்களும் இலக்கணங்களும் தமிழரின் வாழ்வியல் கலைக்களஞ்சியம். இலக்கியத்தின் தோற்றம் முதன்மையானது என்பது தெளிவாகிறது. அவ்விலக்கியங்களில் இருந்து பெறப்பட்டதுதான் இலக்கணம் என்பதை, ''எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பது போல இலக்கியத்திலிருந்து பெறப்படுவது இலக்கணம்'' எனக் கூறிச்சென்றனர். முதன்மையான , முழுவதும் கிடைத்த இலக்கணமான தொல்காப்பியம் தமிழரின் வாழ்வியல் சிறப்பை அகம், புறம் என இரண்டாகப் பகுத்து இலக்கணம் கூறுகிறது. அவற்றுள் தொல்காப்பியப் புறத்திணையியலின் துறைகள் ஏழனுள் வெட்சித் திணையைப் பற்றியும், அதன் துறைகளைப் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

## தொல்காப்பியம்

தமிழில் கிடைக்கப்பெற்ற முழுமுதல் இலக்கண நூல் தொல்காப்பியம். இது தொல்காப்பியரால் எழுதப்பட்டது. எழுத்து, சொல், பொருள் மூன்று பகுதிகளுக்கும் இலக்கணம் கூறுகிறது. தமிழ்மொழியின் அமைப்பினையும் மக்கள் வாழ்வியலையும் இலக்கிய இயல்புகளையும் விளக்கும்விதத்தில் அமைக்கப்பெற்ற ஆகச்சிறந்த நூல் தொல்காப்பியம். எத்தன காலம் பற்றிய பாடபேதம் இருப்பினும் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு தொல்காப்பியத்தின் காலம் என்பது அறிஞர் பலரின் முடிபாகும். இது 161 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. நூல் முழுமைக்கும் முதன்முதலில் உரைகண்டவர் இளம்பூரணர். அவருக்குப்பிறகு, நச்சினார்க்கினியர், பேராசிரியர், சேனாவரையர், கல்லாடர் எனப்பலரும் உரை எழுதியுள்ளனர். ஆயினும், தொல்காப்பியம் முழுமைக்கும் இளம்பூரணர் உரையே சிறந்தது என்பர்.

## புறத்திணையும் போர் மரபும்

மனித வாழ்வு இருநிலைத் தன்மையது. ஒன்று அகவாழ்வு, மற்றையது புறவாழ்வு. அகம் சுட்டிச் சொல்ல இயலாததாயினும் புறம், இதுவெனப் புலப்படுத்தும் பாங்கைப் பெற்றது. பழந்தமிழ்நாட்டு வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் தொல்காப்பியர், புறத்திணையியல் என வரையறுத்து, அக்காலத்து மக்கள் மேற்கொண்டு நடத்திய போர்பற்றிய விளக்கங்களை அளித்துள்ளார். ''புறத்திணையியல் இயக்கும் பழந்தமிழ் போர்கள், சென்று தாக்கும் போர்கள் ஆகா; மாறாக நின்று தாக்கும் போர்களே'' என்கிறார் புலவர் கா.கோவிந்தன்(ப.த.போ.நெ). போர் எனும்போது கண்மூடித்தனமாக இல்லாமல் வரைமுறையோடு போர்புரிந்து, தமிழர்கள் தங்களது வீரத்தை வெளிப்படுத்தியுள்ளனர் என்பது தெளிவாகிறது.

போர் விரும்பத்தகாத ஒன்று, வேண்டாததும்கூட என்றாலும் போர் நிகழாத நாடு உண்டா ? இல்லை. போராட்டம் தொடர்ந்து நடைபெருவதிலேயேதான் வாழ்வின் வளர்ச்சி அடங்கியுள்ளது. மக்களினம், பிற உயிரினங்களோடும், இயற்கைகளோடும் போராடுவது

*இயல்பு. அத்தகைய போராடலில் ஒரு நேர்மையும் உண்டு. இது பற்றி சங்க இலக்கியம் முதற்கொண்டு பல்வேறு இலக்கிய வடிவங்கள்வரை போர் நெறியைக் கூறியுள்ளன. போர் நடப்பதற்கான அடிப்படைக் காரணங்கள் பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை என்பதை ஒல்காப் புகழ் தொல்காப்பியர் கூறியுள்ளார். அதனையே வெட்சிப்போர், வஞ்சிப்போர், உழிஞைப்போர், தும்பைப்போர் எனப் பகுத்துள்ளார். நிரை கவர்தல்/மீட்டல் காரணமாக நிகழ்ந்தபோர்கள் இரண்டு; நாடு கவர்தல்/காத்தல் காரணமாக நிகழ்ந்த போர்கள் இரண்டு; அரண் அழித்தல்/காத்தல் காரணமாக நிகழ்ந்த போர்கள் இரண்டு; தன் வலிமைச் செருக்கால் நடந்தபோர்/செருக்கடக்க நடந்தபோர்கள் இரண்டு, எனப் போர்கள் எண் வகைப்படும். இதில் அழிவுப்போர்களான நிரைகவர்தல், நாடுகைப்பற்றல், அரண் அழித்தல், ஆற்றல் நிலைநாட்டல் என்பன அறமல்லாப் போர்களாகும். நிரை மீட்டல், நாடு காத்தல், அரண் காத்தல், ஆற்றல் செருக்கழித்தல் முதலியன ஆக்கப்போர்களாகும். இவற்றை அறநெறிப் போர்கள் என்பர். இப்போர்களுக்கு வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை எனும் பெயர்கள் சூட்டி, அவற்றைப் புறத்திணையியல் பகுதியில் விளக்கியுள்ளார் தொல்காப்பியர்.*

*வெட்சித் திணை - அறிமுகம்*

*தொல்காப்பியப் புறத்திணையியலின் முதல் திணை வெட்சித் திணையாகும். வெட்சித் திணையாவது நிரை கவர்தல். பண்டைக் காலத்தில் ஒரு நாட்டின் செல்வவளம் ஆநிரைகளாகக் கருதப்பட்டன. இதனை உணர்த்தும் விதமாகவே வள்ளுவரும் "மாடல்ல மற்றையவை" (மாடு செல்வத்தின் விழுமியது) என்கிறார். பகைவர் நாட்டுப் பசுக் கூட்டங்களைக் கவர்வதன்மூலம் தங்கள் நாட்டு செல்வத்தைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்று பண்டைய வேந்தர்கள் கருதினர். இதனையே,*

*"வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்*
*ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்" (தொல்.புறம். நூ:6)*

*எனும் நூற்பாமூலம் தொல்காப்பியர் விளக்குகிறார். அவ்வாறு நிரை கவரச் செல்லும் வெட்சி வீரர்கள் வெட்சிப் பூவைச் சூடிச் செல்லுவர். வெட்சிப்பூ செந்நிறம் உடையது என்பதை "செங்காள் வெட்சி" (முருகு:21 , மணி:3.111) என்று நக்கீரரும் சீத்தலைச் சாத்தனாரும் கூறுகின்றனர். பொருளாதாரத்தைப் பெருக்கும் நோக்கில் வெட்சிப் போரினை வேந்தர் நாடினர். அவ்வாறு போர்புரியச் செல்லும் வெட்சி வீரர்கள், எதிரி நாட்டில் வாழும் அந்தணர், மகளிர், குழந்தைகள், முதியோர், நோய்வாய்ப்பட்டோர், ஆநிரை முதலானவற்றைப் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுமாறு முரசறிவித்தல் பண்டைக்காலப் போர் மரபாகும். இதை உணர்த்தும் விதமாக,*

*"ஆவும் ஆனியற் பாப்பன மாக்களும்*
*பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்*
*தென்புலம் வாழ்நகர்க்கு அருங்கடன் இறுக்கும்*
*பொன்போல் புதல்வர் பெறாஅ தீரும்*
*எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்" (புறநானூறு)*

*எனும் நெட்டிமையாரின் புறநானுற்றுப் பாடல்மூலம் பண்டைய போர் மரபை நன்கு விளங்கிக்கொள்ள முடிகிறது.*

*மன்னனின் ஆணைக்கிணங்க வீரர்கள் பகைநாட்டிற்குச் சென்று, யாரும் அறியாவண்ணம் ஆநிரைகளைக் கவர்ந்து பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு சேர்ப்பர். ஆநிரைகளைக் காப்பதே வெட்சியறமாகிறது. ஆநிரைகளுக்கு உரிமையுடைய வீரர்கள், பகைவர்களால் கவர்ந்து செல்லப்பட்ட தங்கள் ஆநிரைகளை மீட்க முற்படுவர் இதனைக் கரந்தைத் திணை என்பர். கரந்தைத் திணையைத் தனி திணையாகக் கூறாமல், வெட்சித் திணைக்குள்ளே கூறுகிறார் தொல்காப்பியர். ஆனால் தொல்கப்பியத்திற்குப் பிறகு எழுதப்பட்ட இலக்கண நூல்கள் புறத்திணையைச் சுட்டும்போது கரந்தைத் திணையைத் தனியாகவே வரையறுத்துள்ளனர்.*

*வெட்சி – குறிஞ்சி*

*அகத்திணைகளுள் முதன்மையானதாகச் சுட்டப்பெறுவது குறிஞ்சித் திணை. மனிதத் தோற்றத்தின் ஆதிநிலம் மலை என்பதை பல்வேறு ஆய்வுகள்மூலம் அறியமுடிகிறது. மனித*

இயல்பின் இருவேறு கூறுகளுள் முதலாமது அகமாக இருப்பினும், அடுத்தது புறம். அகமுதற் திணையான குறிஞ்சிக்குப் புறனாக அமைந்தது வெட்சித் திணையாகும். “வெட்சிதானே குறிஞ்சியது புறனே”(தொல்.புறம்.) எனும் நூற்பாவழி அறியலாம். குறிஞ்சிக்குரிய களவும், வெட்சிக்குரிய போரும் ஒரே இடத்தில் நிகழ்வதாலும், வெட்சி வீரர் சூடும் வெட்சிப்பூ குறிஞ்சி நிலத்திற்கு உரியதாலும், களவு பிறர் அறியாமல் நடைபெறுவதைப் போல் வெட்சித் திணையொழுக்கமாகச் சொல்லப்படும், ‘ஆநிரை கவர்தலும்’ பிறர் அறியாமல் நிகழ்த்தப்பெறுவாதலும் வெட்சித் திணை குறிஞ்சித் திணைக்குப் புறனாயிற்று.

ஆனால் இக்கருத்தை புலவர்.கா.கோவிந்தன் மறுக்கிறார். குறிஞ்சி நில மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு முதலிய அனைத்தும் தங்கள் நிலப்பகுதியிலேயே கிடைக்கும். அப்படியிருக்க அவர்கள் பிறரது ஆநிரைகளைக் கவர வேண்டிய அவசியம் இருக்காது. ஒருவேளை குறிஞ்சி நிலத்திலிருந்து புலம்பெயர்ந்து வாழ்ந்த மக்களான பாலை நிலத்தினர்க்குத்தான் களவாட வேண்டிய அவசியம் வந்திருக்கும் என்கிறார். பாலை எனும் நில அமைப்பு தனியாக இல்லை என்பது,

”முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும் காலை” (சிலம்பு.நாடுகாண் காதை 64-66)

எனும் அடிகள்மூலம் தெளிவாகிறது. நிலம் மட்டும் பொருத்தமின்றி அமைந்திருப்பதோடு நில்லாமல், வெட்சித் திணை பற்றி கூறப்படும் தொல்காப்பியம் தவிர்த்த, பிற புறத்திணை நூல்களின், நூற்பாக்கள்கூட, குறிஞ்சிநில மக்களான வேட்டுவர், குறவர் எனும் பெயர்களோ; முல்லைநில மறவர்களான ஆயர், கானவர் எனும் பெயர்களோ இடம்பெறவில்லை என்பதை, “நிரை கொள்ளும் வெட்சி வீரர், யாண்டும் வேட்டுவர், குறவர் எனக் குறிஞ்சித் திணைப் பெயர்களினாலேயே அழைக்கப்பெறுவதில்லை. மாறாக மறவர், எயினர் என்ற பாலைத் திணைப் பெயர்களினாலேயே அழைக்கப்பெறுகின்றனர்” என்கிறார் புலவர்.கா.கோவிந்தன் (ப.த.போ.நெ). வெட்சித் திணைக்குப் புறனாய் குறிஞ்சித்திணை அமைவதற்கில்லை என்பதற்கான சான்றுகளை புலவர்.கா.கோவிந்தன் அவர்கள் தந்திருப்பது ஏற்புடையதே, ஆயினும், மூல நூலாசிரியரான தொல்காப்பியர் குறிப்பிடும் குறிஞ்சி நிலத்தில் தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்த மானுட வாழ்வியலானது, அகக்கருத்துகள் தோன்றியவிடத்துதானே புறச்சிந்தனையும் தோன்றியிருக்க வேண்டும் என என்னும்போது “வெட்சிதானே குறிஞ்சியது புறனே” எனும் தொல்காப்பியரின் கூற்றை ஆமோதித்து ஏற்கவேண்டும்.

### இளம்பூரணர்

தொல்காப்பியம் முழுமைக்கும் உரையெழுதிய உரையாசிரியரான இளம்பூரணர் வெட்சித் திணை பற்றி, “நிறைகோடல் குறிஞ்சிக்குரிய மலைசார்ந்த நிலத்தின்கண் நிகழ்தலானும், அந்நிலத்து மக்களாயின் பிறநாட்டு ஆநிரையைக் களவிற்கோடல் ஒருபுடை குறிஞ்சிக்கு உரித்தாகிய களவோடு ஒத்தலானும் அதற்கு இது புறனாயிற்று” என்கிறார் (தொல்.பொருள்). சூடும் பூவும் அந்நிலைத்திற்குரிய பூவாதலானும் அதற்கு இது புறமாம்” என்று (தொல்.பொருள்) காரணம் கூறுவது கருதத்தக்கது. தொல்காப்பிய நூற்பாவில் குறிப்பிடப்படும் ‘ஆதந்தோம்பல்’ என்ற தொடருக்கு ‘ஆவினைக் களவினாலே கொணர்ந்து பாதுகாத்தல்’ எனப் பொருள்கூறி; ஓம்புதலாவது ‘மீளாமல் காத்தல்’ எனவும் விளக்கங் கூறுவர் இளம்பூரணர்.

### நச்சினார்க்கினியர்

‘உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர்’ எனும் அடைமொழி கொண்ட நச்சர் வெட்சித் திணைக்கு கூறும் உரை, “களவொழுக்கமும் தங்குற் காலமும் காவலர் கருதினும் தான் கருதிய பொருளை இரவின்கண் முடித்து, மீட்டலும் போல்வன ஒத்தலின் வெட்சி குறிஞ்சிக்குப் புறனே” என்கிறார் (தொல்.பொருள்). களவு என்பது குறிஞ்சிக்குரிய அகவொழுக்கம் போல, ‘வேற்றுப்புலக் களவின் ஆதந்து ஓம்பல்’ வெட்சிக்குரிய புறவொழுக்கமாகும். இரண்டும் இரவில் நிகழ்வன. களவாக அமைவன இருவகை ஒழுக்கங்களிலும் காவல்களைத் தப்பவேண்டிய திறமையும் ஆற்றலும் தேவைப்படுகின்றன” என்கிறார் (தொல்.பொருள்).

*நாவலர் ச.சோமசுந்தர பாரதியார்*

*முற்கால இலக்கண உரையாசிரியர்களே தொல்காப்பியத்திற்கு உரை தந்திருந்த சூழலில், பிற்காலத்திலும் இலக்கணத்திற்கு உரை எழுதிய சான்றோர்களும் உளர். அவர்களுள், நாவலர் ச.சோமசுந்தர பாரதியார் அவர்களின், ''காதல் கண்ணிய அனைத்தொழுக்கங்களுக்கும் குறிஞ்சி முதலாதல்போல, அமர்கொள் மரபின், புறத்திணைகள் எல்லாம் வெட்சியைக் கொண்டு துவங்குதலானும், குறிஞ்சியும் வெட்சியும் ஒருங்கே களவில் நிகழ்வதாலானும், ஒழுக்கமுறையால் வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயிற்று. இனி, நிரை மேயும் மலைசார்பு களவிற் கூடும் குறிஞ்சிக்கும், களவில் ஆதந்து ஓம்பும் வெட்சிக்கும் சிறந்துரியதாகும், நள்ளிரா இவ்வீரொழுக்கங்களுக்கும் ஏற்புடைத்தாகலும், இடத்தானும் காலத்தானும் இவற்றிடை ஒருபுடை இயைபுடைமை எய்து வித்தலானும் வெட்சி குறிஞ்சிக்குப் புறனாய் அமையும்'' என உரைவிளக்கம் தருகிறார் (தொல்.பொருள்)*

*பேராசிரியர் க.வெள்ளைவாரணன்*

*பேராசிரியர் வெள்ளைவாரணரும் தன்னுடைய தொல்காப்பிய உரைவளம் எனும் நூலில் வெட்சித் திணைக்கு ''பகைவர் நாட்டுப் பசுக்கூட்டங்களை நள்ளிரவிற் களவிற் கவர்ந்துகொண்டு வந்து தம்நாட்டிற் பாதுகாத்தலாகிய இவ்வெட்சியொழுக்கம், நாடாள் வேந்தனது ஆணையின் வழியே நிகழ்தற்குரியதென்பதும், மன்னனின் ஆணையின்றி, அவனுடைய படைவீரர் முதலியோர் தம் விருப்பத்தின்படி பகைவர்நாட்டுப் பசு நிரைகளைக் கவர்தற்குரியரல்லர் என்பதும் 'வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின் ஆதந்து ஓம்பல்' என ஆசிரியர் கூறுதலாற் புலனாம்'' என்கிறார் (தொல்.புறம்.உரைவளம்).*

*பண்டைக்காலத்தில் போர் நிகழ்ந்தது என்பதையும் அப்போரின் தொடக்கமாக நிரைகவர்தல் அமைந்தது என்பதையும், பல்வேறு இலக்கியங்கள்வழி அறியமுடிகிறது.தொல்காப்பியர் காலத்து போர் முறைகளில் முதலில் வெட்சிப்போரே நடைபெறும் என்றும், அதன்பிறகே வஞ்சி, உழிஞை, தும்பை முதலாய போர்கள் நிகழ்ந்தன என்பது புலனாகிறது. இனி தொல்காப்பிய வெட்சித் திணைக்குரிய துறைகள் பற்றி காண்போம்.*

*வெட்சித் திணைக்குரிய துறைகள்*

*வெட்சித் திணைக்குரிய துறைகள் பதினான்கு என்கிறார் தொல்காப்பியர். இதனை ''உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே'' (தொல்.பொருள். நூ 69) எனும் நூற்பா சுட்டுகிறது. உட்குவரத்தோன்றும் எனும் தொடருக்கு 'அச்சத்தை விளைவிப்பன' என்பது பொருளாகும். உட்குவரத்தோன்றும் என்பதற்கு ''போர் பயிற்சி இல்லாத ஆயர்களும் அயலாகும் வெட்சி வீரர்தம் செயல்கண்டு அஞ்சுவர்'' என்கிறார் சோமசுந்தர பாரதியார். வெட்சித்திணையின் துறைகளை 'பலபொருட் பகுதி' என்கிறார் நச்சினார்க்கினியர்.*

*''படையியங்கு அரவம் பாக்கத்து விரிச்சி*
*புடைகெடப் போகிய செலவே புடைகெட*
*ஒற்றின் ஆகிய வேயே; வேய்ப்புறம்*
*முற்றின் ஆகிய புறத்துறை முற்றிய*
*ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே*
*நோயின்று உய்த்தல் நுவல்வழித் தோற்றம்*
*தந்துநிறை பாதீடு உண்டாட்டுக் கொடையென*
*வந்த ஈரேழ் வகையிற்று ஆகும்'' (தொல்.பொருள்)*

*1.படையியங்கு அரவம்*

*களவில் ஆநிரைகளைக் கவர்வதற்காகச் செல்லும் வெட்சி வீரர்கள் சத்தமின்றி (அரவமின்றி)ச் செல்வதே அவர்கள் மேற்கொள்ளும் செயலுக்கு உகந்தது. அஞ்சாமையும் மதமும் காரணமாக அணிவகுத்துச் செல்லும் வீரர்களின் இயக்கம் அரவத்திற்குப் பொருந்தும். நிரை கவர்தலை வெட்சி என்றும் நிரை மீட்டலைக் கரந்தை என்றும் வேறு பிரித்தல் பன்னிரு படலத்தார் கொள்கையாகும். ஆனால், இரண்டையும் வெட்சி எனும் ஒரே திணைக்குள் அடக்கிக் கூறுவதே தொல்காப்பியரின் விருப்பம் என்பதைப்*

புரிந்துகொண்ட நச்சினார்க்கினியர், "இது முன் ஈரேழாம் என்ற துறை இருவகைப்பட்டு இருபத்தெட்டாம் என்கிறது" எனக் கூறுகிறார். வெட்சிக்குப் பொருத்தப்பட்டுள்ள 14 துறைகளும் கரந்தைக்கும் பொருந்தும் என்கிறார் நச்சர். "நிரைகவரப் படை நடக்கும் ஆர்ப்பு" என்பர் நாவலர் சோமசுந்தர பாரதியார்.

ஆனால் புலவர்.கா.கோவிந்தன் படையியங்கு அரவம் எனும் துறையே பிற்சேர்க்கையாக இருக்கவேண்டும் என்கிறார். ஏனெனில் களவில் நிரைகவரச் செல்வோர் ஆரவாரமிட்டுச் செல்வது இயல்பன்று என்பதை, "களவில் நிறைகொள்ளும் ஒழுக்கமாகிய வெட்சிக்கண், வெட்சி அரவம் என ஒரு துறை அமைத்தல் அமைவுடைமைத்தாகாது. களவாடச் செல்வார் துடி முதலாய பறை ஒலிக்கச் செல்வர் எனல் ஏலாது" (ப.த.போ.நெறி-பக் 49)

2.பாக்கத்து விரிச்சி

விரிச்சி என்பது நற்சொல் கேட்டல். பாக்கம்-படை செல்லும் பகுதி. அக்காலத்து முதல், ஒரு செயலைச் செய்யச் செல்லும்முன் நற்சொல் கேட்டல் எனும் நம்பிக்கை வேரூன்றிய ஒன்று. பாமர மக்களிடம் மட்டுமன்றி படை மறவர்களிடமும் இப்பழக்கம் இருந்தது. விரிச்சி சாதகமாக இருந்தால்தான் வினைமேற்கொள்வார் என்பது கருத்து. "நிரை கவர்வதற்குப் புறப்பட்ட வெட்சி வீரர் தாம் இரவில் செல்லும்பகுதியில் நல்வாய்ப்புட் கேட்டலும். நிரை மீட்டற்கு எழுந்த கரந்தை வீரர் வழியில் புறப்போந்தோர் கூறியவற்றை வாய்ப்புள்ளாகக் கேட்டலும் பாக்கத்து விரிச்சி எனப்படும்" என்பர் நச்சர். புள்நிமித்தத்தைப் போலவே, வாய்சொல் நிமித்தமும் கொள்ளப்படுதலின், பின்னது வாய்ப்புள் என்று கூறப்பெற்றது. எனின், சுத்தானந்த பாரதி, 'புள்ளொலியால் நல்லதரிதல்' என்று குறித்தனர். க.வெள்ளைவாரணன் அவர்கள், நிரைகோடற்கு எழுந்தோர் போந்து விட்ட பாக்கத்துக் கங்குலின் நல்வாய்ப்புட் கேட்டலும், நிரை மீட்டற்கு எழுந்தோர் இடைப்புலத்துப் புரம்போந்தோர் கூறியவற்றை வாய்ப்புள்ளாகக் கேட்டலும்" என்கிறார் (தொல்.புறம்.)

3.புடைகெடப் போகிய செலவு

செலவு என்றால் பயணம் என்பது பொருள். இளம்பூரணர் "பக்கம் கெடல் போகிய செலவு" என்கிறார். (பக்கம்-ஒற்றர்) "மாற்றரசர் பக்கத்தாரகித் தம் நிலத்தில் நிற்பவர்கள். இவர்க்குத் தெரியாமல் வெட்சி வீரர்கள் செல்ல வேண்டும் என்பதை இத்துறை சுட்டுகிறது" என உரை தருகிறார். வெட்சி வீரரும், கரந்தை வீரரும் தத்தம் மாற்றாற்குரிய ஒற்றர் உணராமல் நிரைகவர்தற்கும், மீட்டற்கும் செல்லுதல் 'புடைகெடப் போகிய செலவு'"எனப் பொருள் கொள்கிறார் நச்சர். பக்கத்து இடம் இல்லையாம்படி படை பரந்து செல்லுதல்" என்பர் சோமசுந்தர பாரதி. நிரைகோடற்கு எழுந்தோர் ஆண்டுநின்று மீண்டுப்போய்ப் பற்றார் புலத்து ஒற்றர் உணராமற் பிற்றைஞான்று சேறலும், நிரைமீட்டற்கு எழுந்தோர் ஆண்டு ஒற்றப்படாமற் சேறலும்" என உரைக்கிறார் க.வெள்ளைவாரணர் (தொல்.பொருள்)

4.புடைகெட ஒற்றின் ஆகியவேய்

வேய் என்ற சொல்லானது வேயப்படுவது, மூடுவது, மறைவு என்ற பொருள் தருதலோடு ஒற்றுதலையும் குறிக்கும். வேய் என்பதற்கு உளவு எனப் பொருள் கூறுகிறார் சோமசுந்தர பாரதி. "மாற்றரசர் பக்கத்தில் உள்ளவர்கள் அறியாதபடி ஒற்றரால் ஆகிய ஒற்றுதலை இத்துறை சுட்டியது" என்கிறார் இளம்பூரணர் (தொல்.பொருள்). எல்லாப்போர்களுக்கும் ஒற்றறிதல் தேவைப்படும். அதனால்தான் இவ்வியலின் தொடக்கத்தில் வெட்சிப் போர் கூறும் பகுதியில் ஒற்றினை வைத்தனர் என்கிறார் இளம்பூரணர். ஒற்று என்பதற்கு மையினை ஒற்றி எடுக்கும் உறிஞ்சுதாள் போல், ஒற்றர்கள் மாற்றாரின் உண்மையினை ஒற்றி எடுப்பதென்பர்.

5.வேய்ப்புறம் முற்றின் ஆகிய புறத்து இறை

இறை என்பதற்கு இருக்கை என்று பொருள். வேய் என்பது ஆகுபெயரால் வேய்க்கப்பட்ட இடத்தினைக் குறிக்கும் என்பர் இளம்பூரணர். "வேய்ப்புறம் ஒற்றியறியப்பட்ட இடம்; முற்றுதல் - சூழ்தல், வளைத்தல்" என்பர் க.வெள்ளைவாரணர். நிரைகவர்தற்குரிய இடத்தை வளைத்துப் புறத்தே தங்கியிருத்தலைக் குறிக்கிறது இத்துறை. நச்சர் கூறும் பொருள் சற்று வேறுபட்டது.

“நிரைகவர்தற்கு எழுந்த வெட்சி வீரர் உளவு கூறியவர்களுக்குச் சிறப்புச் செய்து முடிந்த பின்னர்’ என்ற பொருளில் “வேய்ப்புறம் முற்றின் ஆகிய” எனும் பகுதி உணர்த்துவதாகக் கொண்டார். ஒற்றர்க்குச் சிறப்பு செய்தபின் நிரைகள் இருப்பிடத்திற்குப் புறத்தே வெட்சியர் செவ்விபார்த்து ஒடுங்கியிருக்கும் இருக்கைப் பகுதியையும் நிரை மீட்கச் சென்றோர் தமது நிரைபுறத்துச் சென்று விரைவொழிந்து இருக்கும் இருக்கைப் பகுதியையும் ‘புறத்து இறை’ சுட்டும்” என்றார். “உளவறிந்த சூழலை வளைத்து அற்றம் நோக்கி அடங்கியிருத்தலைக் குறிக்கும்” என்கிறார் சோமசுந்தர பாரதி (தொல்.பொருள்).

*6.முற்றிய ஊர்கொலை*

“வெட்சி வீரர் நிறைகவர்தற் பொருட்டு முற்றுகையிட்டிருக்கும் ஊரை அழித்தல்” என்பர் இளம்பூரணர். “வெட்சியர் நிரைகாவலரைக் கொன்று பகையறுத்தலையும், கரந்தையர் பகைவர் ஊரிற் சென்று நிரைமீட்டுங்கால் எதிரிடுவோரைக் கொலை புரிதலையும் இத்துறைக்குரிய செயலாகக் குறிப்பர்” என்கிறார் நச்சர் (தொல்.பொருள்). வளைந்துகொண்டு நிரைமீட்கப் பொருவோரைக் கொல்லுதைக் குறிக்கும்” என உரைவிளக்கம் தருகிறார் சோமசுந்தர பாரதி. “நிரைகோடற்கு எழுந்தோர் அவர் புறஞ்சேரியை வளைத்துக் கொண்டு ஆண்டுநின்ற நிரைகாவலரைக் கொன்று பகையறுத்தலும், நிறைமீட்டற்கு எழுந்தோர் அவ்வூரை விட்டுச் சிற்றூரைக் காத்துக்கோறலும்” என விளக்கம் கூறுகிறார் க.வெள்ளைவாரணர்(தொல்.புறம்).

*7.ஆகோள்*

ஆகோளாவது, “நிரை காப்போரை வீழ்த்தி, நிரையினைக் கைப்பற்றுதல்” என்பர் இளம்பூரணர் (தொல்.பொருள்). “எதிர் விலக்குவோர் இலராக வெட்சியர் நிரையினைப் பிடித்துக் கொண்டுவருதலும்; கரந்தையர் தமது நிரையினை அற்றமின்றி மீட்டுவருதலும்” என்கிறார் நச்சர். ‘ஆநிரை கொள்ளுதல்’ என்பர் சோமசுந்தர பாரதி. “நிரைகோடற்கு எழுந்தோர் எதிர் விலக்குவோர் இலராக நிரையகப்படுத்தி மீட்டலும், நிரை மீட்டற்கு எழுந்தோர் தமது நிரையை அற்றமின்றி மீட்டலும்” என்கிறார் க.வெள்ளைவாரணர் (தொல்.புறம்).

*8.பூசல் மாற்று*

பூசல்-போர். ஆநிரை கவர்ந்து வரும் வெட்சியாரை மீட்டற் பொருட்டுப் பின்தொடர்ந்து வந்து கரந்தையார் புரியும் போரினை விலக்கி, வெற்றிகரமாகத் திரும்புதல் பூசல் மாற்று எனப்படும். “மீட்க வந்த கரந்தையார் பூசலை வெட்சியார் மாற்றுதலும் மீட்டுச்சென்ற வெட்சியார் பூசலைக் கரந்தையார் மாற்றுதலும்” என்று பொருள் காண்பர் நச்சர். மாற்றுதல்-விலக்குதல். “போரின்முன் நிகழும் ஆர்ப்பு பூசல் எனப்படும்.போராய் வளருமுன் அதனைத் தடுத்து விலக்கல் வெட்சியார் வினையாதல் பூசல்மாற்று” எனப்பட்டது என்பர் சோமசுந்தர பாரதி. “நிரை கொண்டு போகின்றார் தம்பின்னே உளைத்தற்குரலோடு தொடர்ந்து சென்று ஆற்றிடைப் போர் செய்தோரை மீண்டு பூசலைமாற்றுதலும், நிரையை மீட்டுக் கொண்டு போகின்றார் தம் பின்னர்வந்து போர் செய்தோரை மீண்டு நின்று பூசலை மாற்றுதலும்” என்கிறார் க.வெள்ளைவாரணர் (தொல்.புறம்)

*9.நோயின்றுய்த்தல்*

கவர்ந்த ஆநிரையினை வருத்தமின்றிக் கொண்டுவருதல் நோயின்றுய்த்தல் துறையாகும். “கவர்வாரும் மீட்பாரும் ஆநிரையின் நலம்காத்துக் கொண்டு போதலைச் சுட்டும்” என்பர் நச்சர். “கொண்டோர் அங்ஙனம் நின்று நின்று சிலர் பூசன்மாற்றத் தாங்கொண்ட நிரையினை இன்புறுத்திக் கொண்டுபோதலும், மீட்டோரும் அங்ஙனம் நின்று நின்று சிலர் பூசன்மாற்றத் தாம் மீட்ட நிரையினை இன்புறுத்திக் கொண்டு போதலும் நோய் இன்றி துய்த்தல் துறையாகும்” என்கிறார் க.வெள்ளைவாரணர் (தொல்.புறம்)

*10. நுவல்வழித் தோற்றம்*

சொன்னமாத்திரத்தில் வந்து நிற்றல். தம் சுற்றத்தார், வெட்சிவீரர் வந்துவிடுவார் என்று சொல்லியவழி ஆநிரையுடன் வந்து நிற்றலைக் குறிக்கும். இதுவும் வெட்சியார், கரந்தையார் இருவருக்கும் பொருந்தும் பொது” என்பர் நச்சர். ‘நுவலுவழித் தோற்றம்’ என்பதற்கு

*“பாடிவீட்டுள்ளோர் மகிழ்ந்துரைத்தற்குக் காரணமான நிரைகொண்டோர் வரவும், ஊரிலுள்ளோர் கண்டு மகிழ்ந்துரைத்தற்குக் காரணமான நிரை மீட்டோர் வரவும்” என்று பொருள் கொள்ளுகிறார் நச்சர். “தம்மவர் புகழும்படி நிரைகொண்டார் மீளும் பொலிவு நுவல்வழித் தோற்றம்” என்கிறார் சோமசுந்தர பாரதி (தொல்.பொருள்)*

*11.தந்துநிறை*

*கொள்ளப்பட்ட நிரையினைத் தம் ஊரகத்துக் கொணர்ந்து நிறுத்தல்” என்கிறார் இளம்பூரணர். அரசன் ஏவிச்சென்ற வெட்சியார், அரசனுக்குரிய அரண்மனை வளாகத்தில் நிறுத்தாது, பொதுவிடத்தில் நிறுத்துதலில் ஒரு பொருளுண்டு என்பர். எனின், “வெட்சியார் கவர்ந்த நிரையைத் தம் ஊர்ப்புறத்துத் தந்து நிறுத்தலும், நிரைமீட்டோர் மீட்டநிரையைத் தமக்குரிய இடத்தில் நிறுத்தலும் என்று பொருள்கொண்டார் நச்சர். “நிரைகொண்டோர் தாங்கொண்ட நிரையைத் தம்மூர்ப்புறத்துத் தந்து நிறுத்துதலும், நிரைமீட்டோர் தாம்மீட்ட நிரையினைத் தந்து நிறுத்தலும்” என்கிறார் க.வெள்ளைவாரணர் (தொல்.பொருள்).*

*12.பாதீடு*

*ஊர்ப்புறத்துக் கொணர்ந்து நிறுத்திய அந்நிரையினைக் கூறிடுதல் என்கிறார் இளம்பூரணர். கூறிட்டு வேட்சிவீரர்களுக்கு மட்டுமின்றிப் புள்வாய்ப்புறச் சொல்லிய கணியர்க்கும் ஒற்றார்க்கும் பங்கிட்டுத் தருதலாகும். இதற்கும் வேறு விளக்கங்கூறுகிறார் நச்சர், “ஈத்தலும் ஈதலும் போல, பாத்தலும் பாதலும்ஒன்றாதலிற் பாதீடாயிற்று”. வேந்தன் ஏவலால் தாம்கொண்ட நிரையை வெட்சி வீரர் பகுத்துக்கொள்ளுதலும்; மீட்ட நிறையைக் கரந்தையர் உரியவர்க்கு வழங்குதலும் பாதீடு” என்று விரித்துரைத்துள்ளார். “ஈத்தலும் ஈதலும் போலப் பாத்தலும் பாதலும் ஒன்றாதலிற் பாதீடாயிற்று; வேந்தனேவலாற்றாங் கொண்ட நிரையைப் பகுத்துக் கோடலும், மீட்டோருந் தத்தநிரையைப் பகுத்துக்கோடலும், நிரையை இழந்தோர்க்குப் பகுத்துக் கொடுத்தலும் பாதீடு” என்கிறார் க.வெள்ளைவாரணர் (தொல்.புறம்).*

*13.உண்டாட்டு*

*நிரைபகுத்த மறவர் வெற்றிப் பெருமிதத்தால் உண்டு களித்து மகிழ்ந்தாடுதல் உண்டாட்டு எனப்படும். இது வெற்றியைக் கொண்டாடும் விருந்து நிகழ்ச்சியாகும். “வெட்சியார் நிரைகவர்ந்த மகிழ்ச்சியால் சுற்றத்தோடு கள்ளுண்டு மகிழ்தலையும், கரந்தையார் நிரைமீட்ட மகிழ்ச்சியால் அவ்வாறே மகிழ்தலையும் இத்துறை சுட்டும்” என்பர் நச்சர் (தொல்.பொருள்). நிரைகொண்டார் தாங்கொண்ட நிரையைப் பகுத்துத் தாங்கொண்ட மகிழ்ச்சியாற் சுற்றத்தொடு கள்ளுண்டு மகிழ்ந்து விளையாடுதலும், நிரைமீட்டார் வென்று நிரைமீட்ட கொற்றத்தான் உண்டாடுதலும் உண்டாட்டு” என்கிறார் க.வெள்ளைவாரணர் (தொல்.புறம்). பழங்காலத்தில் போரில் வென்றாலோ, தன் வலிமையைக் காட்டி பெண்ணை மணப்பதோ, முதலான நேரத்தில் மட்டுமே உண்டாட்டு எனும் வழக்கமிருந்தது. ஆனால், இன்று மகிழ்ச்சி, துக்கம், இழப்பு என எதற்கெடுத்தாலும் இம்மரபு பிணைந்துள்ளது. இத்தகைய மாற்றம் சமூகத்தை சீரழிக்கும் முயற்சியே. இதற்கான விழிப்புணர்வு அவசியம்.*

*14.கொடை*

*முன்சுட்டியவர்களுக்கு அன்றி இரவலர் யாவர்க்கும் வரையாது வழங்கி மகிழ்தல் கொடை எனப்படும். இத்துறை ஒன்றுதான் இதற்கு முற்பட்ட துறைகள் அனைத்தையும் சேர்த்து வெட்சித் திணைக்குரிய நிலையினை விளக்கும். ஏனெனின், நிரை கவர்ந்தவர் வழங்குவதற்குத்தான் கொடை என்ற பெயரே தவிர, நிரைமீட்டல் தமது உடைமை வழங்கிய செய்தி காணப்படவில்லை. எனின், வழக்கம்போல் இரு திறத்தார்க்கும் ஏற்ப உரை செய்தார் நச்சர் (தொல்.பொருள்). “தாங்கொண்ட நிரையை இரவலர்க்கு வரையாதுகொடுத்து மனமகிழ்தலும், நிரைமீட்டோர்க்கு வென்றிப் பொருட்டு விளைந்த கொடைப்பகுதியும்” என்கிறார் க.வெள்ளைவாரணர் (தொல்.புறம்). போரிட்டபொழுதுமன்றி மற்ற நேரங்களில்கூட நமக்குக் கிடைத்ததை நம் சுற்றத்தார்க்குக் கொடுத்து மகிழும் பண்பு இன்றுவரை இருப்பதற்குக் காரணம் தமிழர் மரபு என்பது புலனாகிறது.*

தொகுப்புரை

பண்டைய சான்றோர்களின் வாழ்வியலை அறிந்துகொள்ள இலக்கியங்களோடு, இலக்கணமும் உறுதுணையாய் இருந்துள்ளன. புறத்திணைகளுள் முதலாவதாகச் சுட்டப்பெறும் வெட்சித் திணையுள் 14 துறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. துறைகள் 1 முதல் 4 வரை வருவன போரின் ஆயத்தநிலை. 5 முதல் 9 வரை சொல்லப்பட்டிருக்கும் துறைகளே வெட்சிப் போரின் மைய நிகழ்சிகள். 1o முதல் 14 வரையுள்ள துறைகள் போரின் விளைவுகளைப் பற்றிச் சொல்லுகின்றன. பசுக்கூட்டங்கள் நாட்டின் செல்வமாக மதிக்கப்பட்டன. போருக்கு ஆயத்தகமாகும் பொழுது நிமித்தம் பார்த்தல், விரிச்சி கேட்டல் முதலிய நம்பிக்கைகள் இருந்துள்ளன. ஆனாலும் இதைப்போன்ற எண்ணங்களில் நம்பிக்கை இல்லாத மறவர்களும் இருந்துள்ளனர் நச்சினார்க்கினியரும், வைத்தியநாத நாவலரும் “வேண்டாத வீரம்” எனும் துறையுள் எடுத்துரைக்கின்றனர். வீரர்கள் பார்ப்பதற்கு முரடுபோன்று இருந்தாலும், போரில் பெற்ற வளத்தை பலர்க்கும் கொடுக்கும் பண்புடையவர்கள் என்பது புலனாகிறது. போர் பண்டைய காலத்தில் மட்டும்தான் இருந்தது என்று எண்ணக்கூடாது. தற்காலத்திலும் நாடுகள் தங்கள் வலிமையைக் காட்டவும், பிறநாடுகளை அச்சுறுத்தவும் போரினைக் கையாள்கின்றன. பண்டையகாலப் போர்க்கருவிகள்போல் இல்லாமல் நவீன தொழில்நுட்பத்துடன் போர் நிகழ்கின்றன.

முடிவுரை

தொல்காப்பிய வெட்சித் திணையில் உள்ள துறைகள் பற்றியும், அக்காலப் போர்முறையின் போர் நீதி பற்றியும், தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இத்தகைய பார்வையால் நம் பழமையான இலக்கிய இலக்கணங்களை மறுவாசிப்பு செய்யவும், தமிழ்ச் சான்றோர்களின் வீரவொழுக்கத்தையும் தெரிந்துகொள்வதோடு நில்லாமல், பண்டைய காலத்து வீரத்தையும் தற்காலத்து வீரத்தையும் ஒப்பிட்டு நோக்க முடிகிறது.

துணைநூற் பட்டியல்


1..இளம்பூரணர் உரை - தொல்காப்பியம் பொருளதிகாரம்
சாரதா பதிப்பகம் சென்னை 14.

2. தொல்காப்பியம் புறத்திணையியல் உரைவளம்
- பேராசிரியர் க.வெள்ளைவாரணன்
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

3.புறத்திணை வாழ்வியல் - முனைவர்.சோ.நா.கந்தசாமி
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

4.தொல்காப்பியம் பொருளதிகாரம்
அகத்திணையியல் புறத்திணையியல் - நச்சினார்க்கினியர்
. சாரதா பதிப்பகம் அண்ணா நகர்
சென்னை - 40

5.புறத்திணை வாழ்வியல் - முனைவர்.சோ.நா.கந்தசாமி
தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.

6.திருமுருகாற்றுப்படை - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
டி.டி.கே. சாலை, சென்னை.

7.மணிமேகலை - (உரையாசிரியர்) துரை.தண்டபாணி
உமா பதிப்பகம் 18, பவளக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை - o1.

8.புறநானூறு (மூலமும் உரையும்) - புலியூர்க் கேசிகன்
. சாரதா பதிப்பகம் அண்ணா நகர்
சென்னை - 40

9.பண்டைத் தமிழர் போர் நெறி - புலவர் கா.கோவிந்தன்
16, இராமானுஜர் தெரு சிட்லபாக்கம்
சென்னை 64.


********* ********* ********** ********* ********* ********** ********** **********